[1990 ஏப்ரல் 6

முத்திரைத் தாள்கள் விற்பனை.

*5117—திரு. கே. பிச்சாண்டி:

மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முத்திரைத் தாள்களை அதிக விலைக்கு விற்கும் ஸ்டாம்பு வெண்டர்களை கைது செய்து சிறையிலிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே,

சட்டத்தில் இடமில்லை.

திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முத்திரைத் தாள்கள் மக்களுக்குத் தட்டுப்பாடின்றிக் கிடைக்கவும், விற்பனையாளர்கள் அதிக விலையில் விற்பதைத் தடுக்கவும், பதிவாளர் அலுவலகம் உள்ள ஊர்களில் தடையின்றி கிடைக்க முத்திரைத்தாள்விற்கும் உரிமம் அதிக அளவில் வழங்கவும், அதிக அளவில் முத்திரைத் தாள்கள் அவர்களுக்குக் கிடைக்கவும் அரசு நடவடிக்கையெடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, அவர் கேட்ட கேள்வி,—முத்திரைத் தாள்களை அதிக விலைக்கு விற்கும் முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் முறையற்ற செயல்களுக்கு முத்திரைச் சட்டம் விதி 25 (iii) இன் கீழ் உரிமத்தை ரத்து செய்ய விதிகளில் இடம் இருக்கிறது. அவர் கேட்டது, அப்படிப்பட்ட தவறான முயற்சியில் தாள்களை அதிக விலைக்கு விற்கும் முத்திரைத்தாள் விற்பனையாளர்களைக் கைது செய்ய அரசு முன் வருமா என்கின்ற கேள்வி. சிறை பிடிக்க அரசுக்கு உரிமை இல்லை; அறையில் வைக்க அரசுக்கு உரிமை இல்லை.

திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தில் இடமில்லை என்பதால்தான், உரிமங்கள் அதிகம் வழங்கப்பட வேண்டுமென்ற வகையிலே முத்திரைத் தாள்கள் விற்கின்ற உரிமங்களைப் பெறுவதில் வேலையற்ற பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையில் உரிமம் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, முன்னுரிமை வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 6]

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முத்திரைத் தாள்களைவிற்கக் கூடிய ஸ்டாம்பு வெண்டர்கள் சில பேர் வேண்டுமென்றே அந்தத் தாள்களை விற்காமல் ஸ்டாக் வைத்துக் கொள்கிறார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்பான ஒரு முத்திரைத் தாள் வேண்டுமென்று கேட்கின்ற பொழுது அந்தத் தாள்களை அதிக விலைக்கு விற்று போர்ஜரி வழக்கு தாக்கல்செய்வதற்கு அவர்கள் உறுதுணை புரிகிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவ அவர்களே, ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும், எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. ஆசையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முத்திரைத் தாள் விற்கும் உரிமையை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, குறைந்த அல்லது ஒன்றிரண்டு நபர்களுக்குக் கொடுத்திருக்கின்ற காரணத்தினால் இத்தகைய சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே, அந்த வட்டார நிலைமையைக் கருதி, முத்திரைத்தாள் விற்கக் கூடிய உரிமையை அதிகமான நபர்களுக்கு வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, தேவைப்பட்டால் அந்தக் காரியத்தில் அரசு ஈடுபடும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள் தட்டுப்பாடாக இருக்கின்ற நேரத்தில் அதற்கான பணத்தைச் சார் பதிவாளர் அலுவலகத்தில் கட்டி விட்டுப் பதிவு செய்து கொள்வதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. அதுபோல, நீதிமன்றங்களிலும், சில சமயங்களில் ஸ்டாம்ப் பேப்பர்கள் கிடைப்பதில்லை. ஆகவே நீதிமன்றங்களில் கன்சர்ன்ட் கிளார்க் ஒருவரை அப்பாயின்ட் பண்ணி அவரிடம் பணம் கட்டி இரசீது வாங்கும் முறையில் முத்திரைத் தாளுக்கு உண்டான மாற்று ஏற்பாடுகளைச் செய்ய அரசுக்கு இயலுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, இது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆல்போன்ஸ் அவர்களின் அருமையான யோசனை. கவனிக்கப்படும்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இந்த முத்திரைத் தாள் விவகாரத்தைப் பற்றித் துணைச் சபாநாயகர் ரொம்ப நன்றாக அருமையாகச் சொன்னார். காரணம் என்ன என்பதைப் பற்றி, ரொம்ப வர வேற்கிறேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கேள்வியைக் கேளுங்கள். அவர் நன்றாகச் சொன்னார் என்று பாராட்டும் விழா அப்புறம் நடத்துவோம்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: பாராட்ட வேண்டியதைப் பாராட்ட வேண்டியதுதானே. ஆகையினாலே, வாங்கு கிறவன் இருந்தால் தானே விற்பவன் இருக்க. எப்படி இருக்கிறது என்றால், ஏதோ வசனம் சொல்வார்கள், அதாவது, என் வீட்டுப் பெண் பொல்லாதது, உன் வீட்டுப் பிள்ளையை அடக்கிக் கொள் என்று. அதுமாதிரி, வாங்குகிறவன் இருந்தால்தானே ஐயா விற்கிறவன் விற்கிறான். இலஞ்சம் கொடுக்கின்றவன் இருப் பதால்தானே வாங்குகிறவன் வாங்குகிறான்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா நேரத்தில் ‘‘தத்துவங்கள்’’ அனுமதிக்கப்பட மாட்டா.

9–35 மணி

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, வாங்குபவர்கள் யார் என்று கண்டுபிடித்து அவர்களுக்குத் தண் டனை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, தீட்சிதர் அவர்கள் தத்துவம் பேசுகிறார் என்று சொன்ன காரணத்தால் சொல்கிறேன். குழப்ப நிலையில் இருந்து தான் தத்துவங்கள் பிறக்கும். (சிரிப்பு).

பட்டா வழங்குதல்.

*6305—திரு. பி. மாரப்பன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா :

காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிப்பிடாரியூர் பஞ்சாயத்து பனங்காட்டில் சுமார் 40 ஆண்டு களாகக் குடியிருப்போருக்கு, குடியிருக்கும் இடத்தை பட்டா கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர் களே,